Mobile: 0449 892 066 | Email :mtdruitttsc@gmail.com | Web : www.mtsc.org.au



## திருக்குறள்

### கடவுள் வாழ்த்து

குறள் : 1 அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.

குறள் விளக்கம்:
எழுத்துகளெல்லாம் “அ” எழுத்தைத் தமக்கு முதலெழுத்தாகக் கொண்டுள்ளன. அதுபோல் உலகத்து உயிர்கள் எல்லாம் கடவுளைத் தமக்கு முதலாகக் கொண்டுள்ளன.

உலகின் மூத்த மொழிகளுள் ஒன்றாக விளங்குகின்ற மொழி தமிழ் மொழியாகும். “கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளொடு முன்தோன்றி மூத்தகுடி” என்று புறப்பொருள் வெண்பா மாலை என்ற புற இலக்கண நூல் கூறுவதைக் கொண்டு தமிழின் பழமையை உணரலாம். இவ்வாறு சிறப்புப் பெற்ற எம் தமிழை நம் சிறார்களுக்கு கற்பிக்கும் தலையாய கடமையை செவ்வனே செய்யும் மவுண்ட் றூயிட் தமிழக் கல்வி நிலையம் தமிழை மட்டுமன்றி மாணவர்களை பண்பு, ஒழுக்கம், பணிவு, தன்னம்பிக்கை, ஆளுமை கொண்ட சிறந்த மாணவர்களாக உருவாக்கி வருவதுடன் அவர்களை ஒரு பொறுப்பு வாய்ந்த மாணவ சமூதாயமாகவும் உருவாக்கிவருகின்றது என்றால் மிகையாகாது. அது மட்டுமன்றி இந்த வருடம் முதல் எமது பாடசாலை மாணவர்கள் HSCல் தமிழை ஒரு பாடமாக எடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகளில் முனைப்புடன் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றது. இச்சிறப்பு பெற்ற எமது கல்வி நிலையத்தில் தமிழ் கற்றிட வந்திருக்கும் மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள், ஆசிரியர்கள் அனைவருக்கும் 2023ம் ஆண்டுக்கான செயற்குழு உறுப்பினர்களின் அன்பான வணக்கம். இச்செய்திமடல் மூலம் பின்வரும் விடயங்களை உங்கள் கவனத்திற்குச் சமர்ப்பிக்கின்றோம்.

### 1. *பாடசாலை விபரம்*

| | |
|---|---|
| வகுப்புகள் / **Classes :** | முன்பள்ளி முதல் ஆண்டு 12 HSC தமிழ் வரை / **Preschool to HSC** |
| நடைபெறும் இடம் / **Centre Location :** | **Colyton Public School**, 43 - 81 Nelson Street, Mount Druitt, NSW 2770 |
| மின்னஞ்சல் / **Email :** | mtdruitttsc@gmail.com |
| இணையத்தளம் /**Website :** | www.mtsc.org.au |
| முகப்புத்தகம் / **Facebook :** | https://www.facebook.com/groups/374995486577634/ |
| கைப்பேசி / **Mobile Phone :** | 0449 892 066 |

### 2. *பாடசாலை நேரம் – பி.ப. 2:00 மணி முதல் பி.ப. 4:30 மணிவரை*

பிள்ளைகளை பாடசாலைக்கு பி.ப. 1.55 மணிக்கு அனுப்பிவைக்குமாறும், பாடசாலை முடிவடையும் போது தாமதமாகாமல் வந்து அழைத்துச் செல்லுமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.

| | |
|---|---|
| ஆரம்பமாகும் நேரம் : | பி.ப. 2.00 மணி |
| இடைவேளை : | பி.ப. 3.15ல் இருந்து பி.ப. 3.30 மணி வரை |
| முடிவடையும் நேரம் : | பி.ப. 4.30 மணி |

### 3. *2023ம் ஆண்டு பாடசாலையின் முக்கிய திகதிகள்*

| | |
|---|---|
| முதலாம் தவணை : | 04.02.2023 முதல் 01.04.2023 வரை * |
| இரண்டாம் தவணை : | 29.04.2023 முதல் 01.07.2023 வரை * |
| மூன்றாம் தவணை : | 22.07.2023 முதல் 23.09.2023 வரை * |
| நான்காம் தவணை : | 14.10.2023 முதல் 16.12.2023 வரை * |

பாடசாலை தொடர்பான மேலதிக விபரங்களுக்கு :

| | | | |
|---|---|---|---|
| பொங்கல் திருவிழா : | 04.02.2023 | கலைவிழா : | 23.09.2023 * |
| குடும்ப குதுகல தினம் : | 25.03.2023 * | சரஸ்வதி பூஜை (வாணி விழா) : | 21.10.2023 * |
| பேச்சுப்போட்டி : | 03.06.2023 * | ஆண்டிறுதிப் பரீட்சை : | 18.11.2023 |
| அரையாண்டுப் பரீட்சை : | 17.06.2023 | ஆண்டிறுதி மாணவர் தேர்ச்சி அறிக்கை : | 09.12.2023 |
| அரையாண்டு மாணவர் தேர்ச்சி அறிக்கை: | 01.07.2023 | ஒளி விழா, பரிசளிப்பு விழா மற்றும் புதிய செயற்குழு தெரிவு : | 16.12.2023 |

* அனைத்து திகதிகளும் கோவிட்-19 சூழ்நிலைக்கேற்ப மாற்றத்துக்குரியது என்பதை கவனத்தில் கொள்ளவும்.

### 4. 2023ம் ஆண்டிற்கான செயற்குழு உறுப்பினர்களின் விபரங்கள் :

தலைவர் : திரு.பா.செந்தில்குமார்
உப தலைவர் : திரு.அ.ரோசாந்த ரூபன்
செயலாளர் : திரு.கு.முரளிதரன்
உப செயலாளர் : திரு.ஆ.பேரின்பமூர்த்தி
பொருளாளர் : திரு.சி.தேசிங்கு
உப பொருளாளர் : திரு.த.மயூரதன்
அதிபர் : திரு.தே.சதீஸ்கரன்
உப அதிபர் : திரு.சி.சுதாகரன்
கல்விக் குழு : திரு.சி.சுதாகரன்
திரு.பா.முரளீதரன்
திருமதி.நி.ஜனார்த்தனன்
திரு.தே.கில்பேட்
திரு.க.கௌரீஸ்வரன்
திரு.சி.சிவசங்கர்

கலாச்சாரக் குழு : திரு.அ.ரோசாந்த ரூபன்
திரு.ஆ.பேரீன்பமூர்த்தி
திரு.த.மயூரதன்
திரு.சு.சசிசுதன்
திரு.ரா.சரவணகுமார்
திரு.க.சுதாகரன்

செயற்குழு உறுப்பினர் : திரு. பெ.தங்கராசு
திரு. பி.சுதர்ஷன்
திரு. வி.முரளீஸ்குமார்
திரு. ஶ்ரீ. இலட்சுமிகாந்தன்

இணை உறுப்பினர் : திரு.பே.மகேஸ்வரமூர்த்தி
திருமதி.ரா.குலவீரசிங்கம்
திரு.த.யோகராஜா

### 5. 2023ம் ஆண்டிற்கான ஆசிரியர்களின் விபரங்கள் :

| | | |
|---|---|---|
| முன்பள்ளி | திருமதி. தயாழினி முரளிதரன் | 0434 284 538 |
| | திருமதி.மோகனரெஜினா கெங்காதரன் | 0402 164 717 |
| | செல்வி. பிரவீணா கில்பேட் (ஆசிரிய உதவியாளர்) | 0466 041 294 |
| ஆரம்பப்பள்ளி | திருமதி. நிருபா ஜனார்த்தனன் | 0469 135 014 |
| | திருமதி. சரஸ்வதி விஜயசங்கர் | 0469 930 315 |
| | செல்வன். விதுசன் முரளீதரன் (ஆசிரிய உதவியாளர்) | 0469 152 512 |
| ஆண்டு 1 | திருமதி. கஜந்தி சதீஸ்கரன் | 0469 077 745 |
| | திருமதி. கௌரிஉஷா சந்திரசேகர் | 0403 145 300 |
| ஆண்டு 2 | திருமதி. பாமரதி மகேஸ்வரமூர்த்தி | 0413 622 746 |
| | திருமதி. நிசாந்தினி முரளிதரன் | 0401 635 387 |
| ஆண்டு 3 | திருமதி. அனிதா சிவசங்கர் | 0466 150 541 |
| | திருமதி. சிந்துஜா பைரஜன் | 0468 920 172 |
| ஆண்டு 4 | திருமதி. விஜயசுதா குகனேஸ்வரன் | 0432 122 601 |
| | செல்வி. சாமினி ரமணன் | 0469 004 966 |
| ஆண்டு 5 | திருமதி. பலோமியற் அன்ரனிஸ்ராலின் | 0414 134 241 |
| ஆண்டு 6 | திரு. எல்விஸ் எமிலியானுஸ் | 0424 314 740 |
| | செல்வி. மேரி ஜெனட் எல்விஸ் | 0450 693 449 |
| ஆண்டு 7 | திருமதி. ராஜேஸ்வரி குலவீரசிங்கம் | 0449 892 066 |
| ஆண்டு 8 | திருமதி. சாந்தினி ஜெயதேவன் | 0401 649 883 |
| ஆண்டு 9 | திருமதி. நிர்மலா திலகரட்ணா | 0434 112 848 |
| ஆண்டு 10 | திருமதி. செல்வராஜி இரங்கநாதன் | 0469 427 599 |
| ஆண்டு 11/12 | திருமதி. ரதி சங்கர் | 0431 662 404 |
| | திரு. பரமேஸ்வரன் இரங்கநாதன் | 0470 386 558 |

6. *பொங்கல் திருவிழா (மாதிரிப் பொங்கல்) – 04.02.2023 சனிக்கிழமை பி.ப. 2:00 மணி*




தை பிறந்தால் வழி பிறக்கும் என்ற கருத்துக்கு இணையாக தை மாதத்தின் முதல் நாளாக பொங்கல் திருநாள் கொண்டாடப்படுகிறது. தைப்பொங்கல் என்பது தமிழர்களால் சிறப்பாகக் கொண்டாடப்படும் ஒரு தனிப்பெரும் விழா. பொங்கல், உழைக்கும் மக்கள் இயற்கைக்கும், மற்ற உயிர்களுக்கும் சொல்லும் ஒரு நன்றியறிதலாகக் கொண்டாடப்படுகிறது. இதனை எமது மவுண்றூயிட் தமிழ் கல்வி நிலையம் வரும் 04.02.2023 சனிக்கிழமை பி.ப. 2.00 மணி தொடக்கம் பி.ப. 3.15 மணி வரை அரசாங்க அறிவுறுத்தல்களுக்கு அமைய சுகாதார நடைமுறைகள் மற்றும் கோவிட் பாதுகாப்பு நடவடிக்கைகள் பின்பற்றப்பட்டு கொண்டாட இருக்கின்றது. இப்பொங்கல் விழாவில் அனைவரையும் கலாச்சார உடையணிந்து பங்குபற்றி சிறப்பிக்கும் வண்ணம் மிகவும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

7. *பெற்றோர் கலந்துரையாடல் -*

எதிர்வரும் **25.02.2023 சனிக்கிழமை அன்று பி.ப. 2.10 மணிக்கு** பாடசாலை மண்டபத்தில் நடைபெற இருக்கும் பாடசாலையின் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகள் பற்றிய முக்கிய கலந்துரையாடலுக்கு சகல பெற்றோர்களையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

8. *குடும்ப குதூகல தினம்* ( Family Fun Day) – *25.03.2022*




இந்த வருடம் பாடசாலையில் குடும்ப குதூகல தினம் அரசாங்க அறிவுறுத்தல்களுக்கு அமைய சுகாதார நடைமுறைகள் மற்றும் கொரோனா பாதுகாப்பு நடவடிக்கைகள் பின்பற்றப்பட்டு எதிர்வரும் 25.03.2023 சனிக்கிழமை பி.ப. 12.30 மணிக்கு ஆரம்பமாகி பி.ப. 5 மணிக்கு நிறைவடையும். அன்றைய தினம் அனைவருக்கும் மதிய உணவு பி.ப. 12.30 தொடக்கம் பி.ப. 1.30 மணி வரை வழங்கப்படும். பாடசாலை மாணவர்கள் பங்குபற்றும் பல்வேறுபட்ட போட்டிகள் ஆசிரியர்கள் மற்றும் நிர்வாகக் குழு உறுபினர்கள் துணையுடன் பி.ப. 2 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. பெற்றோர்கள், மாணவர்கள் அனைவரையும் பங்குபற்றும் வண்ணம் மிகவும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

9. *பேச்சுப் போட்டி – 03.06.2023 பி.ப. 1:00 மணி*

எமது பாடசாலையின் வருடாந்த பேச்சுப் போட்டி இரண்டாம் தவணை ஆரம்பத்தில் எதிர்வரும் 03.06.2023 அன்று மாலை 1:00 மணி முதல் பாடசாலை மண்டபத்தில் ஆரம்பமாகி நடைபெறும். முதலாம் தவணை முடிவில் அந்தந்த வகுப்பு ஆசிரியர்கள் பேச்சுப்போட்டிக்கான உரைத் தாள் பிரதிகளை மாணவர்களுக்கு வழங்குவார்கள். அனைத்து பாடசாலை மாணவர்களும் பேச்சுப்போட்டியில் பங்குபற்ற வேண்டும் என்பது எமது குறிக்கோள். எனவே பெற்றோர்கள் உங்கள் பிள்ளைகளுக்கு அவற்றை மனப்பாடம் செய்வதிலும் மற்றும் அதனை திறமையாக மேடையில் பேசுவதற்கும் உதவுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

10. *ஆண்டு மலருக்கான நிழற்படம் எடுத்தல் - 03.06.2023*



பேச்சுப்போட்டி நடைபெறும் தினமான எதிர்வரும் 03.06.2023 அன்று ஆண்டு மலருக்கான நிழற்படம் எடுக்க இருப்பதனால் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் எமது கலாச்சார உடையணிந்து வருகைதருமாறு மிகவும் பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

11. *பாடசாலை அறிவித்தல்கள்*

அவ்வப்போது பாடசாலை சம்பந்தப்பட்ட அறிவித்தல்கள் செய்திமடல் (Newsletter), மின்அஞ்சல் (email), இணையத்தளம் (Website), முகப்புத்தகம் (Facebook), பெற்றோர் கலந்துரையாடல் (Parent's Meeting) மற்றும் மாணவர் வகுப்பு வாட்ஸ்அப் குழு (Class WhatsApp Group) மூலம் அறிவிக்கப்படும். எனவே ஒவ்வொரு பெற்றோரும் தங்களது சரியான மின்னஞ்சல் முகவரியை பாடசாலை தரவுத்தளத்தில் (School Database) பேணுவதுடன் தங்கள் பிள்ளைகளின் வகுப்பு வாட்ஸ்அப் குழுவில் இணைந்திருப்பதையும் உறுதிப்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

### *12. பாடசாலையில் மாணவர்களைச் சேர்த்தல் மற்றும் மாணவர் வரவு*

பாடசாலையில் சேர உங்கள் குழந்தையின் வயது ஜூலை 31இல் குறைந்தது $3^{1}/_{2}$ வயதைவிடக் கூடியதாக இருக்க வேண்டும். மாணவர்களை வருட ஆரம்பத்தில் பாடசாலையில் சேர்ப்பது பெரிதும் வரவேற்கப்படுகின்றது. இவ்வாறு செய்வதன் மூலம் மாணவர்கள் நம் பாடசாலையில் கற்பிக்கப்படும் பாடங்களை இலகுவாக ஆரம்பத்திலிருந்தே கற்கக்கூடியதாகவும் சக மாணவர்களுடன் நன்கு அறிமுகம் செய்து கொள்ள ஏதுவாகவும் இருக்கும். இது பாடசாலையை இடையூறின்றி சிறப்பாக நடாத்த உதவுவதுடன் தங்கள் பிள்ளை சார்பான அரச மானியத்தையும் பாடசாலை பெற்றுக் கொள்ளக் கூடியதாகவும் இருக்கும். அத்துடன் பாடசாலையில் நடைபெறும் பல்வேறு போட்டிகளில் பரிசில்களைத் தீர்மானிப்பதற்கு மாணவர் வரவும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

### *13. மாணவர்களின் விபரங்கள்*

அனைத்து மாணவர்களின் கல்வி கற்கும் பிரதான பாடசாலை, வகுப்பு, பிறந்த திகதி, தொலைபேசி இலக்கம், முகவரி, மின் அஞ்சல் முகவரி மற்றும் WhatsApp செயலி விபரங்கள் அடங்கிய தரவுத்தளம் (Database) பாடசாலையால் பேணப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இதுவரை இவ்விபரங்களை பதிவு செய்யாத மாணவர்களது பெற்றோர்கள் உடனடியாக பாடசாலை நிர்வாகத்தை தொடர்பு கொண்டு பதிவு செய்யும்படியும் மற்றும் தங்களது பதிவில் ஏதேனும் திருத்தம் மேற்கொள்ள வேண்டியவர்களும் பாடசாலை நிர்வாகத்தை தொடர்பு கொண்டு திருத்தங்களை மேற்கொண்டு தங்களது சரியான தகவல்கள் பேணப்படுவதை உறுதிப்படுத்துமாறும் தங்களை பணிவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

### *14. மாணவர்களின் வகுப்பு*

பாடசாலையில் சேரும்போது மாணவரின் வயது மற்றும் தமிழ் மொழி அறிவு மதிப்பீடு என்பவற்றிற்கு ஏற்ப தகுந்த வகுப்பிற்கு அனுமதிக்கப்படுவர். மாணவர்களின் தமிழ் மொழித்திறன் அவர்களது வயதுப் பிரிவினரிலும் குறைவாக இருந்தால் அவர்கள் இணைப்பு வகுப்பு மற்றும் புகுநிலை வகுப்பு ஆகியவற்றில் சேர்க்கப்பட்டு தனிப்பட்ட கவனத்துடன் விசேட பயிற்சி வழங்கப்பட்ட பின்னர் அவர்களது வயதுப் பிரிவினரின் வகுப்புகளிற் சேர்க்கப்படுவர். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் வகுப்பு மாற்றம் தொடர்பாக அதிபரிடம் கோரிக்கை சமர்ப்பிக்கலாம்.

### *15. பாடப்புத்தகங்கள்*

பாடப்புத்தகங்கள் மற்றும் பயிற்சிப்புத்தகங்கள் என்பன எமது கல்வி நிலையத்தினால் வழங்கப்படும். முன் பள்ளி மற்றும் ஆரம்பப் பள்ளி மாணவர்களுக்கு எமது பாடசாலையின் ஆசிரியர்களினால் பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்ட இணைய வழியுடன் கூடிய பாடம் மற்றும் பயிற்சிப் புத்தகங்கள் கடந்த வருடம் முதல் வகுப்பறை கற்றலுக்காக பயன்படுத்தப்படுகின்றது. அது தவிர ஆண்டு 1 முதல் ஆண்டு 8 வரையான மாணவர்களுக்கு நியூ சவுத்வேல்ஸ் தமிழ் பாடசாலைகள் கூட்டமைப்பின் பாடம் மற்றும் பயிற்சி புத்தகங்களுடன் பிரத்தியேகமாக ஆசிரியர்களினால் தயாரிக்கப்பட்ட பாடத் திட்டமிடல்கள், ஆண்டு 9 முதல் ஆண்டு 12 HSC மாணவர்களுக்கு தற்போதைய புதிய பாடத்திட்டத்திற்கு அமைவாக தயாரிக்கப்பட்ட பாடத்திட்டங்களுடன் மாணவர் சுய மதிப்பீடுகளும் நடைபெறுகின்றன.

### *16. அமைச்சர் விருது* (Minister Award)

நியூ சவுத் வேல்ஸ் மாநில அரசாங்கத்தின் சமுதாய மொழிப் பாடசாலைகள் திட்டத்தின் கீழ் ஒவ்வொர் ஆண்டும் மேற்பிரிவு மற்றும் கிழ்ப்பிரிவு என்னும் இரு நிலைகளில் ஒவ்வொரு மொழிப் பாடசாலை மாணவர்களுக்கும் சிறப்புப் பரிசில்கள் மாநில மட்டத்தில் வழங்கப்படும். ஒவ்வொர் வருடமும் அமைச்சர் விருதுபெறுவதற்கு தகுதியான எமது பாடசாலை மாணவர்களின் தெரிவை எமது பாடசாலை அதிபர் மற்றும் கல்விக்குழுவினர் மேற்கொள்வார்கள். தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களை எமது பாடசாலை அதிபர் தொடர்பு கொள்வார் என்பதையும் உங்களுக்கு அறியத்தருகின்றோம்.

### *17. ஆசிரியர் மற்றும் அதிபர் விருதுகள்*

மாணவர்கள் வகுப்பில் தமது திறமைகளை வெளிப்படுத்துதல், ஒழுக்கமாக இருத்தல், ஆசிரியர் கற்பிப்பதை கவனமாக செவிமடுத்தல், மற்றவர்களுக்கு முன்மாதிரியாக இருத்தல் போன்றவற்றிற்காக ஆசிரியரினால் மாணவர்களுக்கு ஆசிரியர் விருது வகுப்பில் வழங்கப்படும். ஐந்து ஆசிரியர் விருதுகள் பெற்ற மாணவர்கள் ஒரு அதிபர் விருதுக்கு தகமையுடையவர்களாக கருதப்பட்டு அவர்களுக்கு பாடசாலை ஒன்றுகூடலின் போது அதிபரால், அதிபர் விருது வழங்கப்படும்.

### 18. *மதிப்பீடுகள்*

ஒவ்வொரு தவணை முடிவிலும் எழுத்து மற்றும் வாசிப்பு தவணை மதிப்பீடுகள் (Term Assessments) நடாத்தப்படும்.

- முதலாம் தவணை முடிவில் முதலாம் தவணை மதிப்பீடு (Term 1 Assessment) நடாத்தப்படும்.
- இரண்டாம் தவணை முடிவில் அரையாண்டுப் பரீட்சை நடைபெறும். அதில் வாசிப்பு, எழுத்து, வாய்மொழித் தொடர்பாடல் என்பவற்றுடன் பேச்சுப் போட்டிக்கான மதிப்பீடும் (Half-yearly Assessment) நடாத்தப்படும், இம் மதிப்பீட்டின் புள்ளிகள் மாணவர் தேர்ச்சி அறிக்கையில் உள்ளடக்கப்படும்.
- மூன்றாம் தவணை இறுதியில் மூன்றாம் தவணை மதிப்பீடு (Term 3 Assessment) நடாத்தப்படும்.
- நான்காம் தவணை இறுதியில் ஆண்டிறுதிப் பரீட்சை நடைபெறும். அதில் வாசிப்பு, எழுத்து, பேச்சு மற்றும் வாய்மொழித் தொடர்பாடல் என்பவற்றுக்கான மதிப்பீடு (Year-end Assessment) நடாத்தப்படும். இம் மதிப்பீட்டின் புள்ளிகள் மாணவர் தேர்ச்சி அறிக்கையில் உள்ளடக்கப்படும்.

### 19. *இணைய வசதியும்* IPad *மற்றும் மடிக்கணினி வசதியுமுடைய வகுப்பறை* ( *Internet, IPad and Laptop Class Room*)

எமது பாடசாலையில் உள்ள ஒவ்வொரு வகுப்பறையும் மாணவர்களின் சிறப்பான கற்றல் நடவடிக்கைகளுக்காக தற்போது இணைய வசதியும் தொடுகை உணர் திரை வசதியுமுடையதாகவும் மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் பாவனைக்காக IPad மற்றும் மடிக்கணினியும் வழங்கப்பட்டுள்ளது என்பதையும் தங்களுக்கு அன்புடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம்.




### 20. *முதலுதவி சேவை* (First Aid)

மாணவர்களுக்கு முதலுதவி தேவையேற்படின் எமது கல்விநிலைய முதலுதவி உத்தியோகத்தர்கள் திரு. பரமேஸ்வரன் இரங்கநாதன், திரு. ஆறுமுகசாமி பேரின்பமூர்த்தி, திரு. தேவராஜா சதீஸ்கரன், செல்வி. மேரி ஜெனட் எல்விஸ் ஆகியோர்களுடன் தொடர்புகொள்ளவும்.

### 21. *பாடசாலைக் கட்டணம் மற்றும் இதர கட்டணங்கள்*

உங்கள் பிள்ளைகளுக்கான இந்த வருடத்திற்கான பாடசாலை கட்டணத்தை தவணை ஒன்று முடியும் முன் செலுத்தி எமக்கு உதவுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம். அத்துடன் இதுவரை கடந்த வருடத்திற்கான உங்கள் பிள்ளைகளுக்கான பாடசாலைக் கட்டணம் மற்றும் இதர கட்டணங்களான பாடப் புத்தகம், பரிசளிப்பு விழா பங்களிப்பு கட்டணங்கள் செலுத்த தவறியவர்கள் விரைவாக அதனை செலுத்தி பாடசாலை திறம்பட நடைபெறுவதற்கு ஒத்துழைக்குமாறு அன்பாக கேட்டுக்கொள்கின்றோம்.

எமது பாடசாலை Creative Kids Registered Provider ஆக அங்கீகாரம் பெற்றுள்ளதால் நீங்கள் Creative Kids Voucher மூலமும் எமது பாடசாலைக் கட்டணத்தை செலுத்தலாம். எனவே பெற்றோர் கொடுப்பனவை நீங்கள் பணமாக அல்லது Creative Kids Voucher மூலம் செலுத்தலாம் என்பதை உங்களுக்கு அறியத்தர விரும்புகிறோம். மேலதிக விபரங்களுக்கு எமது கல்வி நிலைய பொருளாளர் திரு. சிவகுமார் தேசிங்கு (தொலைபேசி இல : 0401 955 912) அல்லது உப பொருளாளர் திரு. தங்கவேல் மயூரதன் (தொலைபேசி இல : 0421 571 201) அவர்களை தொடர்பு கொள்ளவும்.

### 22. *ஒவ்வாமை* (Allergy)

பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு ஏதாவது உணவுப்பண்டங்கள், குளிர்பானங்கள், பால், கடலை மற்றும் ஏனைய உணவுப்பொருட்களுக்கு ஒவ்வாமை இருக்குமானால் அதுபற்றி நிர்வாகக் குழுவிற்கும் உங்கள் பிள்ளைகளின் வகுப்பு ஆசிரியர்களுக்கும் அறியத்தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

### 23. *சமாதான நீதவான் சேவை*

பெற்றோர்கள் உங்களுக்கான சமாதான நீதவான் சேவை தேவைப்படுமிடத்து சமாதான நீதவானும் எமது செயற்குழு உறுப்பினரான திரு. கில்பேட் தேவதாசன் (தொலைபேசி இல : 0415 788 466) அவர்களை தொடர்புகொண்டு அந்த சேவையை பெற்றுக்கொள்ளமுடியும் என்பதை அறியத்தருகின்றோம்.

### 24. *பெற்றோர்களின் உதவி*

வகுப்பு இடைவேளையின் போது மாணவர்களுக்கு குளிர்பானம், தேநீர் மற்றும் தின்பண்டங்கள் வழங்குவதற்கு பெற்றோர்கள் செயற்குழுவின் உப செயலாளர் திரு. ஆறுமுகசாமி பேரின்பமூர்த்தி அவர்களை தொடர்புகொண்டு உங்கள் பெயர்களை பதிவுசெய்யும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

வகுப்பு இடைவேளையின் போது விளையாட்டு மைதானத்தில் மாணவர்களை கண்காணிப்பதற்கு பெற்றோர்களின் உதவி மிகவும் அவசியமாக உள்ளது. எனவே இதற்கு உதவி செய்ய விரும்பும் பெற்றோர்கள் எமது உப அதிபர் திரு.சிவரத்தினம் சுதாகரன் அவர்களை தொடர்புகொண்டு உங்கள் பெயர்களை பதிவுசெய்யும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

## 25. பாடசாலையில் மாணவர்களின் ஒழுங்கு முறைகள்

- ❖ வகுப்பறையில் அமைதியாக இருந்து ஏனைய மாணவர்களை குழப்பாமல் ஆசிரியரின் சொல்லுக்கு கீழ்படிந்து நடந்து கொள்ள வேண்டும்.
- ❖ உங்கள் ஆசிரியர் வகுப்பறைக்குச் சென்றதன் பின்புதான் மாணவர்கள் வகுப்பறைக்கு செல்ல வேண்டும். அத்துடன் வகுப்பு முடிந்ததும் வகுப்பறையை பாடசாலை ஆரம்பிக்க முன்பு இருந்த ஒழுங்கு முறைக்கு ஏற்ப ஆசிரியருடன் சேர்ந்து ஒழுங்குபடுத்திய பின்பு தான் வெளியேற வேண்டும்.
- ❖ வகுப்பறை பொருட்களை சொந்த தேவைகளுக்கு பயன்படுத்தாமலும் வகுப்பறையில் உள்ள உடமைகளை சேதப்படுத்தாமலும் இருக்க வேண்டும்.
- ❖ வகுப்பறையில் மாணவர்கள் சக மாணவர்களின் பொருள்களை அனுமதி இல்லாமல் எடுத்தல் அல்லது ஒளித்து விளையாடுதல் போன்றவற்றை தவிர்த்தல் வேண்டும்.
- ❖ வகுப்பறையில் மாணவர்கள் தொலைபேசியையோ அல்லது ஏனைய இலத்திரனியல் உபகரணங்களையோ (IPad, Tablet, Nintendo, etc ) பாவிப்பதை கட்டாயமாக தவிர்க்க வேண்டும்.
- ❖ வகுப்பு இடைவேளையின் போது வழங்கப்படும் குளிர்பானம், தேநீர் மற்றும் சிற்றுண்டிகளை வரிசையில் வந்து பெற்றுக்கொள்வதுடன் அவற்றை வகுப்பறைக்கு கொண்டு செல்வதை தவிர்க்க வேண்டும்.
- ❖ இடைவேளை நிறைவடைந்து வகுப்பறை செல்லுமுன் உங்களிடம் எஞ்சியுள்ள உணவுப்பண்டங்களையும், குளிர்பானம் அருந்திய வெற்றுக் குவளைகளையும் மற்றும் குப்பைகளையும் தவறாமல் குப்பைத் தொட்டியில் போடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

## 26. மாணவர்கள் தமிழைக் கற்பதில் பெற்றோர்களின் ஈடுபாடு

ஆசிரியர்கள் தமிழைக் கற்பித்தாலும் பெற்றோர்களே தங்கள் குழந்தைகளின் பிரதான கல்வியாளர்கள். எனவே பாடசாலையினதும் வீட்டினதும் கூட்டு முயற்சியினாலேயே குழந்தையின் தமிழ் மொழி அறிவு வளரும் என்பதால் தமிழ் மொழி கற்பித்தல் பணியில் ஈடுபட பெற்றோர்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

அதாவது:
- ➢ தமிழில் குழந்தைகளுடன் முடிந்தவரை பேசுவது
- ➢ வீட்டுப்பாடம் மற்றும் பிற பாடசாலை நடவடிக்கைகள் மூலம் குழந்தைகளுக்கு வழிகாட்டுதல்
- ➢ குழந்தைகளின் முன்னேற்றம் குறித்து வகுப்பு ஆசிரியருடன் அல்லது அதிபருடன் கலந்துரையாடுவது
- ➢ பாடசாலை ஏற்பாடு செய்த சிறப்பு விழாக்களில் கலந்துகொள்வது
- ➢ பாடசாலை நடவடிக்கைகளில் பங்கேற்பது
- ➢ பாடசாலை நிர்வாகத்தில் இணைந்து பாடசாலையின் வளர்ச்சிக்கு உதவுவது

## 27. பாடசாலை வாகனத் தரிப்பிடம்




பெற்றோர்கள் தயவுசெய்து பாடசாலை சுற்றாடலில் உள்ள வீடுகளின் வாகனம் செல்லும் பாதைகளை (Driveway) மறித்து தமது வாகனங்களை நிறுத்தவோ/பாதைகளை பாவித்து தமது வாகனங்களைத் திருப்பவோ (“U” Turn) வேண்டாம் என்று மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம். இவை சட்டவிரோத செயல்கள் மட்டுமல்லாது பாடசாலை சுற்றாடலில் உள்ளவர்களுக்கு மிகுந்த அசௌகரியங்களை ஏற்படுத்துவதுடன் எமது மவுண்றூயிட் தமிழ்க் கல்வி நிலையத்திற்கு அவப்பெயர் ஏற்படுத்துவதாகவும் அமைகின்றது. ஆகையினால் தயவுசெய்து வாகனங்களை வீதி ஒழுங்கு முறைகளுக்கமைய பாதை ஓரத்தில் நிறுத்தி மவுண்றூயிட் தமிழ்க் கல்வி நிலையத்தின் செயற்பாடுகளிற்கு உதவி செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

பாடசாலைச் சுற்றாடலில் வாகனங்களை நிறுத்தும்போது வீதி ஒழுங்கு முறைகளுக்கமைய நிறுத்தி வைப்பதோடு உங்கள் நடவடிக்கைகள் மற்றவர்களுக்கும் பாடசாலை அயலவர்களுக்கும் இடையூறை ஏற்படுத்தவில்லை என்பதை உறுதி செய்து கொள்ளுமாறும் தங்களை மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.




## 28. Pickup and drop off zone.

மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் பாடசாலையின் நுழைவு வாயில் அருகே ஒரு இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் தயவுசெய்து மாணவர்களை பாடசாலை நேரத்தில் வாகனத்திலிருந்து இறக்கிவிடவும் பின்பு அழைத்துச் செல்லவும் மட்டுமே பயன்படுத்துமாறும் வாகனத் தரிப்பிடமாக பயன்படுத்த வேண்டாம் எனவும் தங்களை அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

*29.* **HSC** *பிரத்தியோக வகுப்பு*

தற்பொழுது மாணவர்களை HSCல் தமிழை ஒரு பாடமாக எடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகளில் தற்போது பிரத்தியோக வகுப்புக்களும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்பதையும் தங்களுக்கு தெரிவிக்க விரும்புகின்றோம். பெற்றோர்களாகிய நீங்கள் உங்களது பிள்ளைகளை HSCயில் தமிழை ஒரு பாடமாக எடுத்து எமது தேன்மதுர தமிழ் மொழியை இவ்அவுஸ்திரேலியக் கண்டத்தில் பரவும்வகை செய்திட வேண்டி நிற்கின்றோம்.

*30. நூலக சேவை (நூலகம்)*

எமது மாணவர்களின் தமிழ் மொழித் திறனை விருத்திசெய்வதற்கு வாசிப்பு மிகவும் அவசியம் என்பதை உணர்ந்து மவுண்ட் றூயிட் தமிழ்க் கல்வி நிலையத்தில் நூலகம் ஆரம்பிக்கப்பட்டு செயற்படவுள்ளது. மாணவர்கள் நூல்களை வீட்டிற்கு எடுத்துச்சென்று வாசிப்பதற்காகக் கொடுக்கப்படவுள்ளது. பல்வேறு தமிழ்க் கதைப்புத்தகங்களும் இறுவெட்டுக்களும் மாணவர்களின் மேலதிக வாசிப்புக்காக வழங்கப்படும். இந்நூல்களை உரிய நேரத்தில் நல்ல நிலையில் மீளளிப்பது, பெற்றோர்களதும் மாணவர்களதும் கடமையாகும். புத்தகங்களில் சேதங்கள் ஏற்படுமிடத்து இது பற்றி உடனடியாக எமக்கு அறியத்தரவும். தயவுசெய்து உங்கள் குழந்தைகள் தமிழ்ப் புத்தகங்கள் வாசிப்பதை ஊக்கப்படுத்துங்கள். அவர்களுடன் அமர்ந்து அவர்கள் தமிழ்ப் புத்தகங்கள் வாசிக்க உதவுங்கள். எமது பாடசாலையிற் கல்விகற்கும் காலத்தில் மாணவர்கள் அதிக தமிழ் நூல்களைக் கற்றுப் பயனடைவர் என்று எதிர்பார்க்கிறோம்.

*31. மாணவர்கள் வாசிப்புத்திறனை ஊக்குவித்தல்*

மாணவர்களது வாசிப்புத்திறனை ஊக்குவிப்பதற்காக இந்த வருடம் முதல் தமிழ் வாசிப்புத்திறனுக்கான அறைகூவல் என்ற திட்டத்தின் மூலம் மாணவர்கள் நூலகத்தை பயன்படுத்தி தமது வாசிப்புத்திறனை மேம்படுத்த எண்ணியுள்ளோம். மாணவர்கள் தமிழ் எழுத்துக்களை அறிவதுடன் தமிழில் உள்ள நல்ல பல நூல்களை வாசிப்பதுவும் இதன் நோக்கம். வருட இறுதியில் இதில் தகுதி பெறும் மாணவர்களை ஊக்குவிக்க சில பரிசுகளை பாடசாலை நிர்வாகம் வழங்க உத்தேசித்துள்ளது என்பதையும் தங்களுக்கு அன்புடன் அறியத்தருகின்றோம்.

*32. மாணவர்கள் தமிழில் கதைப்பதை ஊக்குவித்தல்*

பேசப்படாத மொழி புவியில் வாழ்ந்ததில்லை. மாணவர்கள் மொழியை பயன்படுத்தி கற்க வேண்டும். தமிழில் உரையாட வேண்டும். எனவே பாடசாலை வகுப்பறை தவிர்ந்த ஏனைய இடங்களிலும் சக மாணவர்களுடன் தமிழில் பேசுவதை ஊக்குவிக்க சில பரிசுகளை பாடசாலை நிர்வாகம் வழங்கி வருவதுடன் ஆர்வமுள்ள ஏனைய பெற்றோர்கள் எமது உப செயலாளர் திரு.ஆ.பேரீன்பமூர்த்தி அவர்களைத் தொடர்பு கொள்ளுமாறு தங்களுக்கு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

*33. பாடசாலை விடுமுறை*

எமது பாடசாலையின் தவணை ஒன்று எதிர்வரும் **01.04.2023** அன்றுடன் முடிவடைந்து தவணை இரண்டு வருகின்ற **29.04.2023** அன்று ஆரம்பமாகும் என்பதையும் உங்களுக்கு அறியத்தருகின்றோம்.



நன்றி

மவுண்ட் றூயிட் தமிழ்க் கல்வி நிலைய நிர்வாகம்.

## ஔவையாரின் நான்கு கோடி பாடல்கள்:



1. **மதியாதார் முற்றம் மதித்தொரு கால் சென்று மிதியாமை கோடி பெறும்.**
   நல்ல பண்புகளைக் கைக்கொள்ளாமல் வாழ்பவர் வீட்டிற்கு செல்லாதிருப்பது, கோடி பொன்னுக்கு சமம் அல்லது மதிக்காதவர் வீட்டுக்கு செல்லாமல் இருப்பது எனவும் பொருள் கொள்ளலாம்.

2. **உண்ணீர் உண்ணீர் என்று உபசரியார் தம்மனையில் உண்ணாமை கோடி பெறும்.**
   உணவை அருந்த அன்புடன் அழைக்காமல், வெறும் வாய்ச்சொல்லில் அழைப்போர் வீடுகளில், சாப்பிடாமல் இருப்பது கோடி பொன்னுக்கு சமம்.

3. **கோடி கொடுத்தும் குடிப்பிறந்தார் தம்மோடு கூடுதல் கோடி பெறும்.**
   கோடி பொன்னைக் கொடுத்தாவது, நல்ல குடும்பத்தில் பிறந்தவர்களிடம் சேர்ந்து வாழ்வது, கோடிப் பொன்னுக்கு ஒப்பாகும்.

4. **கோடானு கோடி கொடுப்பினும் தன்னுடைய நாக் கோடாமை கோடி பெறும்.**
   கோடி பொன் கொடுப்பதாகச் சொன்னாலும், சொன்ன சொல் மாறாமல் வாழ்பவன் கோடி பொன்னுக்கு சமம்.